ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක **2151/24 - 2019** නොවැම්බර් මස **26** වැනි අඟහරුවාදා **- 2019.11.26**

2151/24 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலக குறிப்பு இல.: Vada/sw/la.Acq/185.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/2016/WS/210.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

ஆரம்ப வரைபட இல.: யா 2940

மாகாணம்: வட மாகாணம்

மாவட்டம்: யாழ்ப்பாணம்

பிரதேச செயலக பிரிவு: வடமராட்சி தெற்கு-மேற்கு, கரவெட்டி

கிராமம்: மத்தொனி

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: தாழங்குழி; விபரம்: ஒரு நிரந்தரக் கட்டடத்தினையும் உள்ளடக்கிய தோட்டம்; உரிமை கோருவோர்: பொன்னம்பலம் சத்தியமூர்த்தி (இறப்பு); விஸ்தீரணம்: 0.2578 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 09 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஈ. தயாரூபன்,
பிரதேச செயலாளர்,
கரவெட்டி.

பிரதேச செயலகம்,
வடமராட்சி தென்மேற்கு,
கரவெட்டி,
2019, நவெம்பர் 07.

12 - 352

1A - G 31570 — 12 (2019/11) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*